## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# 2009–2010

# அறிவிப்புகள்

**1. பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ / மாணவியர்க்கு எவ்வித நிபந்தனையுமின்றி இலவச கல்வித் திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்றாண்டு பட்டப்படிப்பில் 98,265 பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ/மாணவியர் பயின்று வருகின்றனர். இவர்களில் 59,190 பேர் இலவச கல்வித் திட்டத்தின்கீழ் நிபந்தனைகளுக்குட்பட்டு பயன்பெற்று வருகின்றனர். மீதமுள்ள மாணவ, மாணவியர் நடப்பிலுள்ள பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மிகாமலும், குடும்பத்தின் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளின் காரணமாக இலவச கல்விப் பெற இயலவில்லை. இலவச கல்விப் பெற முடியாத மீதமுள்ள 39,075

பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கும் இலவச கல்வித் திட்டத்தினை நடப்புக் கல்வி ஆண்டு முதல் விரிவுபடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள் என்பதனை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூபாய் 370.83 இலட்சம் கூடுதல் தொடர் செலவினம் ஏற்படும்.

**2. விடுதிகளில் கூடுதல் இடங்கள்**

பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ / மாணவியர்களுக்காக நடத்தப்படும் விடுதிகளில் தற்போது 69,016 மாணவ / மாணவியர்கள் தங்கிப் பயின்று வருகின்றனர். மேலும் கூடுதல் மாணவ/மாணவியர்களைச் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று இவ்விடுதிகளில் 4,000 கூடுதல் இடங்கள் ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றிற்கு சுமார் 2 கோடி கூடுதலாகச் செலவாகும்.

3. <u>சிறு கடன் தொகையை உயர்த்துதல்</u>

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சிறு கடனாக ஒரு பயனாளிக்கு தற்சமயம் ரூ. 10,000/- வழங்கப்படுகிறது. இதனை ரூ.25,000/-ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

4. <u>நரிக்குறவர் மாணவ/மாணவிகளுக்குக் கல்வி உதவி</u>

நரிக்குறவர் இனக் குழந்தைகள் பள்ளி செல்வதை ஊக்குவிக்கும் வகையில் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை பயிலும் நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு மாதம் ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500/- உம், 6 முதல் 9-ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு மாதம் ரூ.100/- வீதம் 10 மாதங்களுக்கு ரூ.1,000/-உம் உதவித் தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

5. <u>விடுதிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள் 1206 மற்றும் முஸ்லீம் மாணவியர்களுக்கான விடுதிகள் 5 ஆக மொத்தம் 1211

விடுதிகளுக்கும் நடப்பாண்டில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**6. இஸ்லாமிய மாணவியர் விடுதிகளுக்கு கணினிகள் வழங்குதல்**

இஸ்லாமிய மாணவியர்களுக்காக **2008–09** ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட **5** விடுதிகளுக்கும் **2009–10**ஆம் ஆண்டில் தலா **5** கணினிகள், உதிரி பாகங்கள், அறைகலன்கள் மற்றும் ஓர் அச்சு இயந்திரம் வீதம் மொத்தம் ரூபாய் **10.13** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**7. மாவட்ட அலுவலகங்களுக்கு கணினிகள் வழங்குதல்**

**2009–10**ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்திற்கு உதிரி பாகங்களுடன் ஒரு கணினி, அறைகலன் மற்றும் ஓர் அச்சு இயந்திரம் வீதம் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு மொத்தம் ரூபாய் **16** இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**8. மின்சார பூச்சி அழிப்பான் வழங்குதல்**

விடுதிகளில் சுகாதாரமான நிலையினை உறுதி செய்யும் பொருட்டு இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து விடுதிகளுக்கும் **2009–10**ஆம் ஆண்டில் ரூபாய் **61.51** இலட்சம் செலவில் மின்சார பூச்சி அழிப்பான்கள் (Electric insect trap) வழங்கப்படும்.

**9. பாய்கள் வழங்குதல்**

**2009–10**ஆம் ஆண்டில் இத்துறையின் கீழ் இயங்கும் அனைத்து விடுதிகளிலும் தங்கிப் பயில்பவர்களுக்கு ரூபாய் **32.36** இலட்சம் செலவில் பாய்கள் வழங்கப்படும்.

**10. கணினிகள் வழங்குதல்**

2009–10 ஆம் ஆண்டில் தொலைதூரப் பகுதிகளில் அமைந்துள்ள 50 பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் வகுப்பு மாணவ, மாணவியர் விடுதிகளுக்கு விடுதி ஒன்றுக்கு 2 கணினிகள் மற்றும் உதிரிபாகங்கள் ரூபாய் 35 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**11. விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்**

விடுதியில் தங்கியிருப்போர் உடல் அளவிலும், மன அளவிலும் தகுதியுடன் திகழப் போதுமான திறந்தவெளி வசதி உள்ள 300 விடுதிகளுக்கு வலையுடன் கூடிய கைப்பந்தும், அனைத்து விடுதிகளுக்கும் ஒரு கேரம் பலகை மற்றும் 2 சதுரங்கப் (Chess) பலகை ஆகியனவும் 2009–10ஆம் ஆண்டில் ரூபாய் 24.68 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**12.பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்**

2009–10ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியர்களின் பாதுகாப்புக்காக 10 அரசு கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூபாய் 83.06 இலட்சம் செலவில் சுற்றுச் சுவர்கள் கட்டப்படும்.

**13. ஆய்வகக் கட்டடங்கள் கட்டுதல்**

2008–09 ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட 3 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 2009–10ஆம் ஆண்டில் ரூபாய் 44.85 இலட்சம் செலவில் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும்.

14. <u>கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு இரும்பு பீரோ வழங்குதல்</u>

புத்தகங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்காக 2009–10 ஆம் ஆண்டில் இத்துறையின் கீழ் செயல்படும் அனைத்து கல்லூரி விடுதிகளுக்கும் இரும்பு பீரோக்கள் ரூபாய் 12.55 இலட்சம் செலவில் வழங்கப்படும்.